**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**சிதம்பரம்**

**அசல் வழக்கு எண். 62-2018**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 24.06.2025 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B. (Hons). அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 24.06.2025 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | மோகன் | வயது.. | 57 |
| கணவர் பெயர் | சுப்பிரமணியன் | கிராமம்.. | சிதம்பரம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 189/3, அதன் விஸ்தீனரம் 11 செண்ட் ஆகும். எனக்கு பாத்தியமான சொத்துக்கள் மஞ்சக்கொல்லை கிராமத்தில் எவ்வளவு உள்ளது என்றால் 2 ஏக்கர் சொத்துக்கள் உள்ளது. அதன் சர்வே எண் என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் வடக்கு வீதியில் பால் ஸ்டோர் வைத்துள்ளேன். எவ்வளவு ஆண்டுகளாக வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் 25 ஆண்டுகள். எனது தந்தையின் பெயர் சுப்பிரமணியன் என்றால் சரிதான். என் தந்தையான சுப்பிரமணிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1 பெண் வாரிசும், 4 ஆண் வாரிசும் உள்ளனர். என் தந்தையார் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை எந்த தேதியில் இறந்தார் என்றால் குறிப்பாக நினைவில்லை. சர்வே எண் 189/3 -ல் உள்ள சொத்தின் விஸ்தீரனம் 22 செண்ட். அந்த 22 செண்ட்டில் யார் யாருக்கு பாத்தியமானது என்றால் எனக்கு தெரியாது.

2. என் தந்தை வழி தாத்தாவின் பெயர் சின்னசாமி. ஜீவா மற்றும் தமிழ்மணி அவர்களின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. எனக்கு குமாரசாமி தெரியுமா என்றால் தெரியும். குமாரசாமி எவ்வளவு ஆண்டு காலம் பழக்கம் என்றால் சுமார் 10 - 15 ஆண்டுகள் பழக்கம். குமாரசாமியின் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. குமாரசாமிக்கு எத்தனை பிள்ளைகள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் மனைவியின் பெயர் ராஜேஸ்வரி. குமாரசாமியின் மீது பிரதிவாதியான முத்துலட்சுமி வழக்கு தாக்கல் செய்த விவரம் ஏதேனும் தெரியுமா என்றால் தெரியாது. வாதியான மாலதிக்கும் பிரதிவாதியான முத்துலட்சுமிக்கும் என்ன பிரச்சினை என்று எனக்கு தெரியுமா என்றால் சொத்து பிரச்சனை. வாதியான மாலதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சாட்சி சம்மன் பெற்று யார் அழைத்து நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் முருகன் அழைத்தன் பேரில்

வந்துள்ளேன். முருகனுக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்மந்தம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் நான் வாங்கிய இடத்தின் பக்கத்தில் இருக்கிறார்.

3. முருகன் யாரிடமிருந்து எந்த தேதியில் கிரயம் பெற்றார் என்றால் குமாரசாமியிடமிருந்து கிரயம் பெற்றார், தேதி குறிப்பாக நினைவில்லை. எவ்வளவு விஸ்தீரனம் கிரயம் பெற்றார் என்றால் 4 1/2 செண்ட். அவர் வாங்கிய 4 1/2 செண்ட் -ற்கான சக்குபந்தி விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு பாத்தியமான சொத்தினை யாரிடமிருந்து கிரயம் பெற்றேன் என்றால் எனது மனைவி பெயரில் முத்துகுமாரசாமிடமிருந்து கிரயம் பெற்றேன். சாட்சி முத்துக்குமாரசாமியா அல்லது குமாரசாமியா என்று குறிப்பாக நினைவில்லை என்று கூறுகிறார். எந்த தேதியில் கிரயம் பெற்றேன் என்றால் எனக்கு நினைவில்லை. எனது மனைவி பெயரில் கிரயம் பெற்ற சொத்தின் சக்குபந்திகள் தெரியுமா என்றால் தெரியாது. குமாரசாமி, ஜீவா மற்றும் தமிழ்மணி-க்கு எந்த தேதியில் கிரயம் கொடுத்தார் என்றால் எனக்கு நினைவில்லை. குமாரசாமி, ஜீவா மற்றும் தமிழ்மணி-க்கு எவ்வளவு விஸ்தீரனம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வாதி மாலதியை தெரியாது என்று சாட்சியம் அளித்த நிலையில் அவர் எவ்வளவு விஸ்தீரனம் கிரயம் பெற்றார் என்றால் 5 செண்ட். எந்த தேதி என்ற விவரம் குறிப்பாக எனக்கு தெரியாது.

4. எனது மனைவி ராஜேஸ்வரி இவ்வழக்கின் பிரதிவாதியான முத்துலட்சுமிக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் சரிதான். அந்த அசல் வழக்கின் எண் என்னவென்றால் எனக்கு குறிப்பாக தெரியாது. அந்த அசல் வழக்கானது எனது மனைவிக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது. என்ன பரிகாரம் கோரி அவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனது பாகத்தை கோரி தாக்கல் செய்யப்பட்டது. அவ்வழக்கானது இருபக்க விசாரணையும் முடிக்கப்பட்டு வழங்கப்பட்ட தீர்ப்பாணையா என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. அவ்வழக்கில் முத்துலட்சுமிக்கு அழைப்பாணை வழங்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. அவ்வழக்கில் வழங்கப்பட்ட Exparte தீர்ப்பை ரத்து செய்ய கோரி விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தானது காலி மனை என்றால் சரிதான்.

5. அசல் வழக்கு எண். 168-2010 ஆனது முத்துலட்சுமி, குமாராசாமியின் பெயரில் தாக்கல் செய்து 03.03.2018ல் சொத்து நீதிமனறத்தின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட விவரம் தெரியும் என்றும் வேண்டுமென்றே எதிர் கட்சியுடன் சேர்ந்து தகராறு செய்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு மஞ்சக்கொல்லை கிராமத்தில் சொத்து ஏதும் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை உட்பட மேற்புறம் உள்ள 11 செண்ட்-ம் முத்துலட்சுமியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. சர்வே எண்.189/3ல் உள்ள 22 செண்ட்டில் மேற்புறம் உள்ள 11 செண்ட் - ஆனது

முத்துலட்சுமியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். வாதியின் கணவரான முருகன் என்பவர் இராணுவத்தில் இருந்து பணி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். எனக்கு முருகன் 20 ஆண்டுகளாக பழக்கம். முருகன் என்பவர் எனக்கு நண்பர் என்ற காரணத்தினால் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- E.Swetha
Additional District Munsif
Chidambaram